# அக்டோபர் – 03 – புதன்

### புனித இமெல்டா

### “என் நீதிபதியிடம் நான் இரக்கத்தையே கெஞ்சுவேன்” – யோபு 9:15

## முதல் வாசகம் :யோபு 9 : 1 – 12.14 – 16

யோபு உரைத்த பதில்உண்மையில் இது இவ்வாறு என்று அறிவேன் ஆனால், மனிதர் இறைவன்முன் நேர்மையாய் இருப்பதெப்படி? ஒருவர் அவருடன் வழக்காட விரும்பினால், ஆயிரத்தில் ஒன்றுக்கேனும் அம்மனிதரால் பதிலளிக்க முடியுமா? இறைவன் உள்ளத்தில் ஞானமுள்ளவர் ஆற்றலில் வல்லவர் அவர்க்கு எதிராய்த் தம்மைக் கடினப்படுத்தி, வளமுடன் வாழ்ந்தவர் யார்?அவர் மலைகளை அகற்றுவார் அவை அதை அறியா அவர் சீற்றத்தில் அவைகளைத் தலைகீழாக்குவார். அசைப்பார் அவர் நிலத்தை அதனிடத்தினின்று அதிரும் அதனுடைய தூண்கள்.அவர் கட்டளையிடுவார் கதிரவன் தோன்றான் அவர் மறைத்திடுவார் விண்மீன்களை.தாமே தனியாய் வானை விரித்தவர், ஆழியின் முதுகை மிதித்து நடந்தவர்.வடமீன் குழுவையும், மிருகசீரிடத்தையும், கார்த்திகை விண்மீன்களையும், தென்திசை விண்மீன் குழுக்களையும் அமைத்தவர் அவரே .உணர்ந்திட இயலாப் பெருஞ்செயல்களையும், கணக்கிட முடியா அருஞ்செயல்களையும் ஆற்றுநர் அவரே.இதோ! என் அருகே அவர் கடந்து செல்கையில் நான் பார்க்க முடியவில்லை நழுவிச் செல்கையில் நான் உணர முடியவில்லை.இதோ! அவர் பறிப்பாரானால், அவரை மறிப்பார் யார்? யாது செய்கின்றீர் என அவரைத் கேட்பார் யார்?இப்படியிருக்க, எப்படி அவருக்குப் பதிலுரைப்பேன்? எதிர்நின்று அவரோடு எச்சொல் தொடுப்பேன்?நான் நேர்மையாக இருந்தாலும் அவருக்குப் பதிலுரைக்க இயலேன் என் நீதிபதியிடம் நான் இரக்கத்தையே கெஞ்சுவேன்.நான் கூப்பிட அவர் பதிலுரைப்பினும், என் வேண்டுதலுக்கு அவர் செவிகொடுப்பார் என்று நம்புவதற்கில்லை.

**பதில்பாடல் :** ஆண்டவரே என் மன்றாட்டு உம் திருமுன் வருவதாக.

## நற்செய்தி :லூக்கா 9 : 57 - 62

அக்காலத்தில் இயேசு சீடர்களாடு வழிநடந்தபோது ஒருவர் அவரைநோக்கி, ”நீர் எங்கேசென்றாலும் நானும் உம்மைப் பின்பற்றுவேன்” என்றார்.இயேசு அவரிடம், ”நரிகளுக்குப் பதுங்குக் குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மானிடமகனுக்கோ தலை சாய்க்கக்கூட இடமில்லை” என்றார். இயேசு மற்றொருவரை நோக்கி, ”என்னைப் பின்பற்றிவாரும்” என்றார். அவர், ”முதலில் நான்போய் என்தந்தையை அடக்கம் செய்துவிட்டுவர அனுமதியும்” என்றார்.இயேசு அவரைப் பார்த்து, ”இறந்தோரைப் பற்றிக் கவலைவேண்டாம். அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள். நீர் போய் இறையாட்சியைப் பற்றி அறிவியும்” என்றார்.வேறொருவரும், ”ஐயா, உம்மைப் பின்பற்றுவேன் ஆயினும் முதலில் நான்போய் என்வீட்டில் உள்ளவர்களிடம் விடைபெற்றுவர அனுமதியும்” என்றார்.இயேசு அவரை நோக்கி, ”கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல” என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் இறைமகன் இயேசு அவரைப் பின்பற்ற விரும்புமொருவரிடம் “நரிகளுக்குப் பதுங்கு குழிகளும் வானத்துப் பறவைகளுக்கு கூடுகளும் உண்டு. மானிட மகனுக்கோ தலை சாய்க்கக்கூட இடமில்லை” (லூக் 9:58) என்கின்றார். இன்னொருவரை நோக்கி “என்னைப் பின்பற்றி வாரும்” (லூக்9:59) எனச் சொல்லுகின்றார். ஏனெனில் “இறைவன் உள்ளத்தில் ஞானமுள்ளவர். ஆற்றலில் வல்லவர். அவர்க்கு எதிராய்த் தம்மைக் கடினபடுத்தி, வளமுடன் வாழ்ந்தவர் யார்? (யோபு9:1-4) என எம்மை ஆழமாகச் சிந்திக்க நற்செய்தி அழைப்பு விடுக்கிறது. “என்னைப் பின்பற்றி வாரும்” என இறைமகன் இயேசு கூறுவது ஒரு சாதாரன அழைப்பல்ல. மாறாக அந்த அழைப்பின் பின்னே செல்பவர்களுக்கு ஏற்படக்கூடிய துன்ப துயரங்கள் விதிமுறைகள் பலவுண்டு. “என்னைப் பின்பற்றி வாரும்” என்ற அழைப்பானது ஆதியில் சீடர்கள் மேற்கொண்ட உறவின் நெடுந்தூரப்பயணம். இறைமகன் இயேசுவைப் பின்பற்றிச் செல்வோருக்கு இடையே ஏற்படும் நெருக்கமாக உறவுப்பாலம். இன்று அதே குரல் கிறிஸ்து அவன், கிறிஸ்து அவள் என்று எம்மை இறைவார்த்தையில் நம்பிக்கைவைத்து இறைபணியில் நிலைத்து வாழ்வதற்கும் அழைத்து நிற்கின்றது. அன்று இறைமகன் இயேசு தமது சீடர்களையும், புனிதர்களையும் அழைத்தது போன்று இன்று எம்மையும் தனித்தனியாக பெயர்சொல்லி “என்னைப் பின்பற்றி வாரும்” என அழைக்கின்றார். தம்முடன் நெருக்கமாக உறவினை ஏற்படுத்த விரும்புகின்றார். ஏனெனில் எமக்கு “வழியும், சத்தியமும், ஜீவனுமாக” இருப்பவர் அவரே. இறைமகன் இயேசு “என்னைப் பின்பற்றி வாரும்” என எம்மை அழைப்பதனை விடுத்து, அவரது அழைப்பை ஏற்று அவரண்டை செல்ல நாம் தயாரா? என்பதே முக்கியமாகும். சிந்திப்போம், செயற்படுவோம்.